வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 2.9.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், புரூனை மற்றும் சிங்கப்பூருக்கு, 3 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

2 ஆயிரத்து 817 கோடி ரூபாய் மொத்தச் செலவில் டிஜிட்டல் வேளாண் இயக்கம் தொடக்கும் உத்தேசத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மும்பை-இந்தூர் இடையே, சுருக்கத் தொலைவிற்கான புதிய ரயில் பாதை ஒன்றை, சுமார் 18 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

புதுச்சேரியில், 10 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட, 14 மாணவ-மாணவிகளுக்கு, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, மாணவர் சேர்க்கை ஆணைகளை வழங்கினார்.

மோடி-வெளிநாடு

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், புரூனை மற்றும் சிங்கப்பூருக்கு, 3 நாள் பயணம் மேற்கொள்கிறார். நாளையும் நாளை மறுநாளும், புரூனை சுல்தான் ஹாஜி ஹசன்னால் போல்கியா-வின் அழைப்பின் பேரில் பிரதமர் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதாகவும், இந்திய பிரதமர் ஒருவர் புரூனை நாட்டிற்கு, இருதரப்பு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்றும், கீழை நாடுகளுக்கான வெளியுறவுச் செயலர் திரு ஜெய்தீப் மஜும்தார் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்தியாவிற்கும்

புரூனை நாட்டிற்கும் இடையிலான தூதரக உறவுகளின் 40- ஆம் ஆண்டை ஒட்டியதாக இப்பயணம் அமைகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது புரூனை பயணத்தின் போது இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் உறவுகளின் எல்லா அம்சங்கள் குறித்தும் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதுடன், புதிய துறைகளில் ஒத்துழைப்பிற்கான வாய்ப்புக்களையும் ஆராய இருக்கிறார்.

பாதுகாப்பு, எரிசக்தி, வர்த்தகம், சுகாதாரம், விண்வெளித் தொழில் நுட்பம்,கலாச்சாரம், மக்கள் நிலையிலான தொடர்புகள் உட்பட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே ஏற்கனவே வலுவான நட்புறவு நிலவி வருகிறது. புரூனை நாட்டில், டாக்டர்கள், ஆசிரியர்கள் உட்பட சுமார் 14 ஆயிரம் இந்தியர்கள்

வாழ்ந்து வருவதாகவும், அந்நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டில் இவர்கள் சிறப்பாக பங்களித்து, நல்ல மரியாதை ஈட்டி இருப்பதாகவும் திரு மஜூம்தார் கூறினார். கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கையிலும், இந்தோ-பசிபிக் பிராந்தியம் பற்றிய இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையிலும், புரூனை நாட்டிற்கு முக்கிய இடம் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, 2 நாடுகளுக்கான தமது பயணத்தின் இரண்டாம் கட்டமாக, வரும் 4-5 ஆகிய தேதிகளில் சிங்கப்பூர் செல்ல இருக்கிறார். சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் வோங் விடுத்த அழைப்பின் பேரில் இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இருதலைவர்களும், இருதரப்பு உறவுகளின்

முன்னேற்றத்தை மறுஆய்வு செய்து, பரஸ்பரம் ஆர்வம் உள்ள பிராந்திய மற்றும் உலக பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்க உள்ளனர். பிரதமர் திரு நரேந்திர மோடி 6 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் சிங்கப்பூருக்கு பயணம் மேற்கொள்வதாகவும், சிங்கப்பூரில் புதிய பிரதமர் அண்மையில் தான் பதவி ஏற்றுக் கொண்டதால் இருதரப்பு உறவுகளை அடுத்த நிலைக்கு உயர்த்த இதுவே சரியான தருணம் என்றும், கீழை நாடுகளுக்கான வெளியுறவுச் செயலர் திரு மஜும்தார் கூறினார்.

ஆசியான் பிராந்தியத்தில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தகக் கூட்டாளி நாடாக சிங்கப்பூர் திகழ்வதும் இந்தியாவிற்கான நேரடி அன்னிய முதலீடுகளில் பெரும் பகுதி, சிங்கப்பூரில் இருந்து கிடைப்பதும் குறிப்பிடத் தக்கது.

*பாரா லிம்பிக்ஸ்*

பாரீஸ் பாரா லிம்பிக்ஸ் போட்டிகளின் மகளிர் 10 மீட்டர் ஏர்-ரைபிள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை அவனி லேக்கராவை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். ஆடவர் உயரம் தாண்டுதல் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய வீரர் நிஷாத் குமாருக்கும், பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதற்கிடையே, பாரீஸ் பாரா லிம்பிக்ஸ் போட்டிகளின் ஆடவர் பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் நிதேஷ் குமார், இன்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார். ஆடவர் வட்டு எறிதல் பிரிவில், இந்தியாவின் யோகேஷ் கத்தூனியா, வெள்ளிப் பதக்கம் வென்றார்.

நெட்ஃபிளிக்ஸ்

நெட்ஃபிளிக்ஸ்- ஓடிடி தளத்தில் ஒளிபரப்பாகும், ஐசி-814 வெப் தொடரில், சில பாத்திரங்கள் சித்தரிக்கப்படும் விதம் குறித்து சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில் மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சகம், நெட்ஃபிளிக்ஸ் நிர்வாகத்திடம் விளக்கம் கோரி உள்ளது. நெட்ஃபிளிக்ஸ் நிகழ்ச்சிப் பிரிவு தலைவர் நாளை அமைச்சகத்தில் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க கூடும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

*அமைச்சரவை*

2 ஆயிரத்து 817 கோடி ரூபாய் மொத்தச் செலவில் டிஜிட்டல் வேளாண் இயக்கம் தொடக்கும் உத்தேசத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. டிஜிட்டல் பொது வசதிகள் போல, விவசாயத்திற்கான டிஜிட்டல் பொது வசதிகளை நிறுவும் வகையில் இந்த இயக்கம் அமையும் என்று, மத்திய

தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் கூறினார். விவசாயிகளின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த, அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளதாகவும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான பயிர் அறிவியல் துறைக்கு, 3 ஆயிரத்து 979 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வேளாண் கல்வி மற்றும் வேளாண் நிர்வாகத்தை வலுப்படுத்தும் பணிகளுக்கு, 2 ஆரத்து 291 கோடி ரூபாய் செலவிடப்படும் என்றும், 860 கோடி ரூபாய் செலவில், நீடித்த தோட்டக் கலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். வேளாண் அறிவியல் மையங்களை ஆயிரத்து 202 கோடி ரூபாய்

செலவிலும், இயற்கை ஆதாரங்களின் நிர்வாகத்தை, ஆயிரத்து 115 கோடி ரூபாய் செலவிலும் வலுப்படுத்த, மத்திய அமைச்சரவை முடிவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் 2 முக்கிய வர்த்தக நகரங்களான மும்பைக்கும்-இந்தூருக்கும் இடையே, 309 கிலோ மீட்டர் சுருக்கத் தொலைவிற்கான புதிய ரயில் பாதை ஒன்றை, 18 ஆயிரத்து 36 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

*நீட்-ரங்கசாமி*

புதுச்சேரியில் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று, நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ-மாணவிகளுக்கான, 10 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 14 பேருக்கு, இன்று முதலமைச்சர்

திரு ரங்கசாமி, மாணவர் சேர்க்கை ஆணைகளை வழங்கினார். சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், கல்வித் துறைச் செயலர் திரு ஜவகர், பள்ளிக் கல்வி இயக்குநர் திருமதி பிரியதர்ஷினி, உயர்கல்வித் துறை இயக்குநர் திரு அமன்சர்மா ஆகியோர் உடன் இருந்தனர். மருத்துவ படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 14 அரசுப் பள்ளி மாணவ-மாணவிகளில் 10 பேர் புதுச்சேரி, மற்றும், தலா இருவர், காரைக்கால்-மாகே பிராந்தியங்களைச் சேர்ந்தவர்கள் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்கள் வரும் 5-ஆம் தேதி மாலை 6 மணிக்குள் கல்லூரியில் சேர வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

புதுச்சேரி-போராட்டம்

புதுச்சேரியில் மின் கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி இன்று தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் நோக்குடன் ஊர்வலமாக சென்ற இண்டியா கூட்டணி கட்சியினரை போலீசார் பாதியிலேயே தடுத்து நிறுத்தியதால் தள்ளு முள்ளு ஏற்பட்டு பதற்றம் நிலவியது. இண்டியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள திமுக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சீய கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்க்ள, நிர்வாகிகள். மற்றும் தொண்டர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். மாநில திமுக அமைப்பாளர் திரு சிவா, மாநில காங்கிரஸ் தலைவர் திரு வைத்திலிங்கம், முன்னாள் முதலமைச்சர் திரு நாராயணசாமி, சிபிஐ மாநிலச் செயலர் திரு சலீம், சிபிஎம் மாநிலச் செயலர் திரு ராஜாங்கம், விடுதலை

சிறுத்தைகள் கட்சியின் முதன்மைச் செயலர் திரு தேவ பொழிலன் ஆகியோர் இதில் அடங்குவர். இண்டியா கூட்டணிக் கட்சிகளின் ஊர்வலம் மற்றும் போராட்டத்தை ஒட்டி, புதுச்சேரி நகரப் பகுதிகள் முழுவதிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

*ஆந்திரா-தெலங்கானா-*

ஆந்திரப் பிரதேசத்தில், மழை-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையை மீட்க, மத்திய-மாநில அரசுகள் இணைந்து எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. தேசிய பேரிடர் மீட்பு படையினர் 126 பேர் அடங்கிய குழு ஒன்று, 40 விசைப் படகுகள் மற்றும் 4 ஹெலிகாப்டர்களுடன் இன்று காலை விஜயவாடாவிற்கு

வந்து சேர்ந்து, உதவி-மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

விஜயவாடாவை தலையிடமாகக் கொண்ட என்டிஆர் மாவட்டத்திலும், கிருஷ்ணா, குண்டூர் உள்ளிட்ட இதர மாவட்டங்களிலும் வெள்ள நிலவரங்களை முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, நேரில் கண்காணித்து வருகிறார். இன்று இப்ராஹீம் பட்டிணம், மூலப்பாடு, கிருஷ்ணா லங்கா உள்ளிட்ட இடங்களுக்கு அவர் நேரில் சென்று வெள்ள நிலவரங்களை பார்வையிட்டார்.

ஆந்திர அரசு, அட்சய பாத்ரா அமைப்புடன் இணைந்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில், தினசரி 1 லட்சம் பேருக்கு சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கிடையே, விஜயவாடாவில் உள்ள

பிரகாசம் அணையில் நீர் வரத்து அதிகமாகவே நீடிப்பதால் அணையில் இருந்து வெளியிடப்படும் நீரின் அளவு வினாடிக்கு 11 லட்சம் கனஅடியாக வெளியேற்றப்படும்.

ராயனப்பாடு மற்றும் கொண்டப்பள்ளி ரயில் நிலையங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதால் விஜயவாடா- ஐதாராபாத் இடையே ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 140 ரயில்கள் ரத்து செய்யப்பட்டு, மேலும் 97 ரயில்கள் வேறு மார்கத்தில் திருப்பி விடப்பட்டுள்ளன.

தெலங்கானா மாநிலத்திலும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, கம்மம், மஹபூபா பாத் மற்றும் சூரியபேட் பகுதிகளில் நிலைமை மோசமாகவே நீடிக்கின்ற பொதிலும், இன்று காலைக்கு மேல் மழை சற்று

குறைந்திருப்பதால் இனி வெள்ளம் வடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. செகந்திராபாத் மற்றும் முக்கிய ரயில் நிலையங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கான பல ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ள. ஐதராபாத்-விஜயவாடா தேசிய நெடுஞ்சாலையிலும் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதால் சாலை போக்குவரத்து வேறு பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளது. ஐதராபாத்தில் இன்று கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை விடப்பட்டது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வீட்டிலிருந்தே பணிபுரிய ஊழியர்களுக்கு அறிவுறுத்தி உள்ளன. தேசிய

பேரிடர் மீட்பு படையினர் உதவி- மீட்பு பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி மழை-வெள்ள நிலவரங்கள் குறித்து, மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும், மழை வாய்ப்பு அதிகம் உள்ள பகுதிகளில் உஷார் நிலையை பராமரிக்கவும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

*கால்பந்து*

மேற்கு வங்கத்தில் கால்பந்து விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் கொல்கத்தாவின் புகழ்பெற்ற மோகன் பகான் சூப்பர் ஜெயன்ட் அணிக்கும், ஈஸ்ட் பெங்கால் புட்பால் கிளப் அணிக்கும் இடையே. மாநில அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, நட்புறவுப் போட்டியை முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத் லக்னோவில் இன்று மாலை தொடக்கி வைத்துப்

பார்வையிடுகிறார். இந்திய கால்பந்து உலகில் கடும் போட்டியாளர்களாக திகழும் இவ்விரு அணிகளும் இதுவரை நாட்டின் 22 நகரங்களில் 340 முறை நேருக்கு நேர் மோதி உள்ள போதிலும் லக்னோவில் இரு அணிகளும் மோதுவது இதுவே முதல் முறையாகும். இதை ஒட்டி உத்தரபிரதேஷ் மாநிலத்தின் 78 மாவட்டங்களுக்கு உட்பட்ட 21 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில், 96 ஆயிரத்து 455 கால்பந்துகளை மாணவர்களுக்கு விநியோகிக்கும் திட்டம் ஒன்றை, அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு தொடக்கி உள்ளது.

கட்கரி

இந்தியாவின் ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறையில், உயிரி எரிபொருட்கள் முக்கிய பங்காற்ற முடியும் என்று, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறி

உள்ளார். இன்று புதுடெல்லியில், உயிரி எரிபொருள் மற்றும் தொழில் நுட்பங்கள் பற்றிய சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியை தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி இந்நிகழ்ச்சியில் பேசுகையில், எத்தனால் கலந்த பெட்ரோல், மற்றும், அழுத்த மூட்டிய உயிரி எரிவாயுவின் பயன்பாட்டையும், கழிவில் இருந்து எரிபொருள் தயாரிக்கப்படுவதையும் அரசு ஊக்குவித்து வருவதாக தெரிவித்தார். பெட்ரோலுடன் கலக்கப்படும் எத்தனால் அளவு தற்போது 11 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் இது, 20 சதவிகிதமாக உயரும் என தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், புரூனை மற்றும் சிங்கப்பூருக்கு, 3 நாள் பயணம் மேற்கொள்கிறார்.2 ஆயிரத்து 817 கோடி ரூபாய் மொத்தச் செலவில் டிஜிட்டல் வேளாண் இயக்கம் தொடக்கும் உத்தேசத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மும்பை-இந்தூர் இடையே, சுருக்கத் தொலைவிற்கான புதிய ரயில் பாதை ஒன்றை, சுமார் 18 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

புதுச்சேரியில், 10 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட, 14 மாணவ-மாணவிகளுக்கு, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, மாணவர் சேர்க்கை ஆணைகளை வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------